**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். STC. 320 /2022**

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் தேதி திங்கட் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜி | தொழில் | : ஓட்டலில் வேலை |
| தந்தை பெயர் | : தென்னப்பன் | சமயம் | : |
| கிராமம் | : பொன்பத்தி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 54 |

தேதி 31.07.2023

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.A.பரமேஸ்வரி W.Gr.II-2435 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர். )**

**முதல் விசாரணை**

1. நான் பொன்பத்தி கிராமத்தில் வசித்து வருகிறேன்.

2. கடந்த 2017 வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் செஞ்சியில் இருந்து ஆலம்பூண்டிக்கு காலை 10 மணி அளவில் 1ம் நம்பர் அரசு பேரூந்தில் ஏறிச்சென்றேன். அப்போது செஞ்சி டு திருவண்ணாமலையில் பிரதான சாலையில் பஸ் சென்றுகொண்டியிருந்தபோது 8 நம்பர் அரசு பேரூந்து வேகமாக வந்து மோதியதில் விபத்து ஏற்பட்டது. பஸ் கண்ணாடிகள் உடைந்தது. அந்த கண்ணாடி துகள் எனது முகத்திலும், எனது கையிலும், மார்பிலும் காயம் ஏற்பட்டது. என்னுடன் பஸ் சில் பயணித்த சுமார் 15 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. எதிரில் வந்து மோதிய 8 நம்பர் பேரூந்தில் இருந்தவருக்கும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நானும், பஸ்சில் காயம்பட்டவர்களும் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். அங்கு 1 வாரம் தங்கி உள்நோயாளியாக சிகிச்சைபெற்றேன். என்னுடன் காயம்பட்டவர்களில் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிலர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைபெற்றார்கள். மருத்துவமனையில் இருந்த போது போலிசார்கள் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டடுப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 29.08.2017 தேதியிட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

**3.** விபத்து சம்மந்தமாக எப்போது போலிசார்கள் விசாரித்தார்கள் என்றால் மறுநாளே விசாரித்தார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. ஆஜர்எதிரி ஓட்டிவந்த பேருந்தின் பதிவு எண் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 8 நம்பர் பேரூந்தைதான் ஓட்டிவந்தார்.

4. தற்போது 8 ம் நம்பர் அரசு பேரூந்தின் பதிவு எண் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் விபத்தில் அடிப்பட்டவர்கள் பெயர் தெரியுமா என்றால் எனது பக்கத்தில் இருந்த முனியம்மாள் , கோவிந்தம்மாள் ஆகியோர்கள் பக்கத்து பெட்டில் இருந்ததால் எனக்கு தெரியும். மற்றவர்கள் பெயர் தெரியவில்லை. அடிப்பட்ட ஆண் பெயர்களை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை,. எந்த இடத்தில் விபத்து நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் விபத்து நடந்த இடத்திற்கு அருகில் ரோடு வளைந்து செல்லும். காட்டில் பெயர் பலகையும் பெரிதாக பக்கத்தில் இருந்தது.

5. போலிசார் என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் 1 கையெழுத்தோ, 2 கையெழுத்தோ வாங்கினார்கள். ஞாபகம் இல்லை. கையெழுத்து போட்ட தாளில் எழுதியதை படித்து காட்டினார்களா என்றால் படித்துதான் கையெழுத்து செய்தேன். விபத்து நடந்த இடம் சற்று சிறிதாக இருக்கும் என்றால் மற்ற இடத்தை விட சற்று சிறிதாகதான் இருந்தது. ரோட்டை ஒட்டி மரம், செடிகள் இருந்ததா என்றால் இருந்தது. விபத்து நடந்த இடத்தில் வாகனம் மெதுவாகதான் செல்ல இயலும் என்றால் ஆமாம். நான் பேரூந்தில் எந்த சீட்டில் அமர்ந்தேன் என்றால் டிரைவர் சீட்டிற்கு பின்னால் 2 வது சீட்டில் அமர்ந்திருந்தேன்.

6. எவ்வளவு கி.மீ. வேகத்தில் பஸ் போனது என்று செல்லமுடியுமா என்றால் அது எனக்கு தெரியவில்லை. எதிரி ஓட்டி வந்த 8 நம்பர் பஸ் எவ்வளவு வேகத்தில் வந்தது என்று சொல்லமுடியுமா என்றால் தெரியவில்லை. எதிரில் வந்த 8 நம்பர் பஸ்சை பார்க்கவில்லை. சத்தம் கேட்ட பிறகுதான் மோதியதை பார்த்தேன் என்று சாட்சி கூறுகிறார். யார் கவணமாக ஓட்டிவந்திருந்தால் விபத்து தவிர்த்திருக்கலாம் என்றால் 1நம்பர் பேரூந்து நிதானமாகதான் சென்றது. 8 ம் நம்பர் பேரூந்துதான் வந்து மோதியது என்று சாட்சி கூறுகிறார். விபத்திற்கு பிறகு 8 நம்பர் பேரூந்து காட்டிற்குள்

சென்றது என்றால் ஆமாம். 1ம் நம்பர் பேரூந்து காட்டிற்குள் போகாமல் அங்கு இருந்த மரம், கல் மீது மோதி நின்றதா என்றால் ஆமாம். 1ம் நம்பர் பேரூந்து வளைவில் சரியான நேரத்தில் ஒதுங்காமல் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் நான் கவனிக்கவில்லை. விபத்து நஷ்ட ஈடு வாங்கிவிட்டேனா என்றால் வாங்கிவிட்டேன். மருத்துவமனையில் போலிசார் விசாரித்த பிறகு மீண்டும் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நஷ்ட ஈடு வாங்குவதற்காக பொய்யாக போலிசார் எழுதியதில் கையொப்பம் செய்து புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. யாருடைய கவணக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பாக என்னால் சொல்லமுடியாது என்றால் சொல்லமுடியாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.